இன்றைய செய்தி நாளைய வரலாறு




# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in    murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 273 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – வைகாசி 01 – வெள்ளிக்கிழமை 15 மே 2026 – கோவை ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 273 : Thiruvalluvar Year - 2057 - Vaikasi 01 - Friday 15 May 2026 - Kovai ★★ 8 Pages ₹ 5.00

## ஜோதிடர் நியமனம்: கடும் எதிர்ப்புக்கு பணிந்தது த.வெ.க. அரசு!

சென்னை, மே 15-

விஜய்யின் ஜோதிடர் ராதன் பண்டிட் வெற்றிவேல் முதல்வரின் அரசியல் பிரிவு சிறப்பு அதிகாரியாக நியமனம் செய்யப்பட்ட உத்தரவு ரத்து செய்யப்படுவதாக தமிழக அரசு அறிவித்துள்ளது.

இதுகுறித்து நேற்று முன்தினம் தமிழக அரசு வெளியிட்ட அறிவிப்பில், "ரிக்கி ராதன் பண்டிட் வெற்றிவேலை முதல்வரின் சிறப்புப் பணி (அரசியல்) அதிகாரியாக நியமிப்பது தொடர்பாகப் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு இதன்மூலம் ரத்து செய்யப்படுகிறது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதல்வர் விஜய்யின் ஜோதிடர் ராதன் பண்டிட் வெற்றிவேல் முதல்வரின் அரசியல் பிரிவு சிறப்பு அதிகாரியாக நியமனம் செய்யப்பட்டார். இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள அரசாணையில், 'தமிழக முதல்வரின் அரசியல் விவகாரங்களைக் கவனிப்பதற்கான சிறப்பு அதிகாரியாக ரிக்கி ராதன் பண்டிட் வெற்றிவேல் நியமிக்கப்படுகிறார். அவர் பொறுப்பேற்கும் தேதியில் இருந்து இந்த நியமனம் அமலுக்கு வரும். இதற்கான பணி விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் குறித்துத் தனியாக அறிக்கை வெளியிடப்படும்' என குறிப்பிடப்பட்டது.

முதல்வர் விஜய்யின் ஜோதிடர் ராதன் பண்டிட் சிறப்பு அதிகாரியாக நியமிக்கப்பட்டதற்கு தி.மு.க., காங்கிரஸ், வி.சி.க., சி.பி.எம்., சி.பி.ஐ. உள்ளிட்ட கட்சிகள் கண்டனம் தெரிவித்தன. மேலும், நேற்று முன்தினம் சட்டப்பேரவையில் பேசிய தே.மு.தி.க எம்.எல்.ஏ. பிரேமலதா, ஜோதிடர் ராதன் பண்டிட் நியமனத்துக்கு எதிர்ப்பு தெரிவித்தார். ஜோதிடர் ராதன் பண்டிட் நியமனத்துக்கு எதிர்ப்பு வலுத்த நிலையில், த.வெ.க. அரசு அந்த உத்தரவை ரத்து செய்துள்ளது.

## Clean Politics–னு சொல்லிவிட்டு Dirty Politics செய்கிறார்கள்!

# தூய சக்தியா? எம்.எல்.ஏ.க்களைத் தூக்குற சக்தியா?

## த.வெ.க.வுக்கு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் கேள்வி!

**சென்னை, மே 15-**

**கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் "Clean Politics-னு சொல்லிட்டு Dirty Politics செய்கிறார்கள்" என்றும் "இது தூய சக்தியா? இல்ல, அடுத்த கட்சி எம்.எல்.ஏ.க்களைத் தூக்குற சக்தியா?" என்றும் பதிவிட்டுள்ளார்.**



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

"தமிழக வெற்றிக் கழக ஆட்சி அமையவோ, தொடரவோ திராவிட முன்னேற்றக் கழகம் தடையாக இருக்காது" என்ற எனது நிலைப்பாட்டுக்கேற்ப திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் நம்பிக்கை வாக்கெடுப்பைப் புறக்கணித்து வெளிநடப்பு செய்திருக்கிறார்கள்.

அதேபோன்று சட்டமன்றத்தில் இருக்கும் எங்கள் தோழமை இயக்க உறுப்பினர்களான சகோதரி திருமதி. பிரேமலதா விஜயகாந்த், பேராசிரியர் ஜவாஹிருல்லா, சகோதரர் தமிமுன் அன்சாரி, சகோதரர் நித்தியானந்தம் ஆகிய உறுப்பினர்களும் வெளிநடப்பு செய்துள்ளனர். அவர்களுக்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

### நம்பிக்கையை சிதைக்கும் வேலையில் த.வெ.க.!

அதேபோல இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய யூனியன் முஸ்லிம் லீக், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி ஆகிய தோழமைக் கட்சிகள், தமிழ்நாட்டில் குடியரசுத் தலைவர் ஆட்சி வந்துவிடக் கூடாது என்ற எண்ணத்தின் அடிப்படையில நம்பிக்கை வாக்கெடுப்பில் அரசுக்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர். அவர்களின் நிலைப்பாட்டையும் நாங்கள் மதிக்கிறோம்.

ஆனால், இந்த ஆட்சி அமைய வழிவகுத்த எல்லாரோட நம்பிக்கையையும் சிதைக்கும் வேலையில தமிழக வெற்றிக் கழகம் இறங்கியிருக்கு. அதற்கு சாட்சி, ஆளுங்கட்சியின் கடந்த 3 நாட்களின் செயல்பாடுகளும், அதற்கு எங்க தோழமைக் கட்சியினர் கொடுத்த அறிக்கைகளும்!

ஆட்சி நிலைக்கத் தேவையான எண்ணிக்கை எங்கள் தோழமை இயக்க நிலைப்பாட்டால் இருந்தாலும், இன்றைய ஆளுங்கட்சி என்ன செய்திருக்கிறது?

Clean Politics-னு சொல்லி ஆட்சிக்கு வந்தவங்க, Dirty Politics பண்ணிட்டிருக்காங்க.

பிளவுபட்ட அ.தி.மு.க. எனும் குழம்பிய குட்டையில மீன் பிடிக்க முயற்சி பண்ணி, அவங்க உறுப்பினர்களை விலைக்கு வாங்கியிருக்காங்க.

### தூய சக்தியா? தூக்குற சக்தியா?

"உங்களோட Starting-ஏ இப்படி இருந்தா Finishing எப்படி இருக்கும்? இது தூய சக்தியா இல்ல, அடுத்த கட்சி MLA-க்களைத் தூக்குற சக்தியா?" எனத் தமிழக வெற்றிக் கழகத்துக்கு வாக்களிச்ச மக்களே வருந்திப் பேசும் நிலை உருவாகிடுச்சு.

முதல்வர் அவர்களே,

**உங்க செயல்பாடுகளை மக்கள் தொடர்ந்து பார்க்குறாங்க. அடுத்து, பிளவுபட்ட அ.தி.மு.க. உறுப்பினர்களுக்கு நீங்க என்ன Return Gift கொடுக்கப் போறீங்க என்பதையும் மக்கள் பார்க்கத்தான் போறாங்க.**

எங்களைப் பொறுத்தவரை, திராவிட முன்னேற்றக் கழகம் தொடர்ந்து தன் கொள்கையில உறுதியா இருந்து, ஆக்கப்பூர்வமான எதிர்க்கட்சியா செயல்படும்!

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

---

## எம்.எல்.ஏ.க்களை 'கடன் பெற்று' நடத்தும்

# த.வெ.க. ஆட்சி வாக்காளர்களின் நம்பிக்கையை இழக்கத் தொடங்கிவிட்டது!

## சட்டப்பேரவையில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் குற்றச்சாட்டு!

**சென்னை, மே 15-**

**"எம்.எல்.ஏ.க்களை 'கடன் பெற்று' நடத்தும் த.வெ.க. ஆட்சி வாக்காளர்களின் நம்பிக்கையை இழக்கத் தொடங்கிவிட்டது" என்று சட்டப்பேரவையில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குற்றஞ்சாட்டினார்.**

புதிதாக அமைந்திருக்கின்ற ஆட்சியின் மீது நம்பிக்கை வாக்கெடுப்பு நடைபெறும் முன் சட்டப்பேரவையில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக அமைந்திருக்கின்ற இந்த ஆட்சியின் மீது இன்று நம்பிக்கை வாக்கெடுப்பு நடக்கப் போகிறது.

அதற்கு முன்பு, வாக்கு எண்ணிக்கை தொடங்கி கடந்த 10 நாட்களாக ஒவ்வொரு நாளும் என்னென்ன நடந்திருக்கிறது என்பதை, எதிர்க்கட்சியாக சில விமர்சனங்களோடு இங்கு வைக்க விரும்புகிறேன்.

### ஆதரவு 1.72 கோடி எதிர்ப்பு 3.21 கோடி!

முதலில் தமிழக வெற்றி கழகம் ஆட்சி அமைக்க வேண்டும் என்று பெரும்பான்மையான மக்கள் உங்களுக்கு வாக்களிக்க வில்லை.

நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில், பதிவான வாக்குகள் சுமார் 4 கோடியே



93 லட்சத்து 25 ஆயிரம் வாக்காளர்கள் வாக்களித்திருக்கிறார்கள். தற்போதைய ஆளுங்கட்சிக்கு வாக்களித்தவர்களின் எண்ணிக்கை எவ்வளவு தெரியுமா? ஒரு கோடியே 72 லட்சத்து 26 ஆயிரம் தான். மீதம் இருக்கின்ற சுமார் 3 கோடியே 21 லட்சம் பேரும், நம்பிக்கை கோருகின்ற உங்கள் கட்சிக்கு எதிராக வாக்களித்திருக்கிறார்கள் என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

### நம்பிக்கை இன்மையால் 2 தொகுதிகளில் போட்டி!

அதாவது கிட்டத்தட்ட 65 சதவிகிதம் மக்களால் நிராகரிக்கப்பட்ட ஒரு ஆட்சியின் மேல் எங்களுக்கு மட்டுமல்ல, உங்களுக்கு வாக்களித்த மக்களுக்குமே கொஞ்சம் கொஞ்சமாக நம்பிக்கை குறைந்து வருகிறது.

அடுத்து மிக முக்கியமான ஒன்று நம்பர்ஸ். மெஜாரிட்டிக்கான நம்பர்ஸ். நம்முடைய சட்டமன்றம் 234 உறுப்பினர்களைக் கொண்டது. `மேஜிக்கல் நம்பர்' என்று சொல்வார்கள். 118 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு கட்சியோ ஒரு கூட்டணியோதான் ஆட்சிக்கு வர முடியும். இப்போது நம்பிக்கை கோருகின்ற உங்கள் கட்சிக்கு, அந்த நம்பர்ஸ் இருக்கிறதா என்று கேட்டால், இல்லை.

108 இடங்கள் தான் இருக்கின்றன. அதுவும் அந்தக் கட்சியின் தலைவர் முதலமைச்சர் அவர்கள் தன் வெற்றி குறித்த நம்பிக்கை இல்லாத காரணத்தினால், இரண்டு இடங்களில் போட்டியிட்டு, அதில் ஒரு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் பதவியை இன்று ராஜினாமா செய்திருக்கிறார்.

இன்னும் அந்தத் தொகுதி மக்களை நேரில் சந்தித்தோ அல்லது ஒரு அறிக்கை மூலமாகவோ ஒரு நன்றியைக் கூட அவர் இன்னும் தெரிவிக்கவில்லை. அதுமட்டுமல்ல, நேற்று உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பில், ஆளுங்கட்சியைச் சேர்ந்த திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதியின் உறுப்பினர் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளக் கூடாது என்று நீதிமன்றத்தில் சொல்லி இருக்கிறார்கள். அதனால், இப்பொழுது ஆளுங்கட்சிக்கு வெறும் 106 இடங்கள் தான் இருக்கின்றன.

### வெளியிலிருந்து ஆதரவு ஏன்?

ஆனாலும், தேர்தலில், தனக்கு எதிராக எங்கள் தலைவர் அமைத்த கூட்டணியில் போட்டியிட்ட கட்சிகளை எல்லாம், சேர்த்துக் கொண்டு, இன்று இந்த ஆட்சி அமைக்கப்பட்டிருக்கிறது. பெரும்பான்மைக்கான கடிதத்தை, ஆளுநருக்குக் கொடுத்து இன்றைக்கு இந்த ஆட்சி அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆட்சிக்கு இன்றைக்கு ஆதரவு தெரிவித்து இருக்கக்கூடிய இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்தியன் யூனியன் முஸ்லிம் லீக் கட்சி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சிகளைச் சேர்ந்த மதிப்பிற்குரிய தலைவர்களெல்லாம், இந்த ஆட்சியை நாங்கள் ஆதரிக்கிறோம் என்பதற்கு சொன்ன காரணம், குடியரசு தலைவர் ஆட்சி அமைந்து விடக்கூடாது என்ற எண்ணத்தில், 'உங்களுக்கு வெளியில் இருந்து ஆதரவு தருகிறோம்' என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.

அதே நேரத்தில், இன்னொன்றையும் சொன்னார்கள். `இப்பொழுதும் எங்கள் தலைவர் தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழக கூட்டணியில் தொடர்வோம்' என்று சொல்லி இருக்கிறார்கள். உங்களுக்கு ஆதரவு கொடுக்கும்போது, அவர்கள் சொன்ன இன்னொரு காரணமும் இருக்கிறது. அதையும் நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். மதச்சார்பற்ற ஆட்சி அமைய வேண்டும் என்று சொன்னார்கள். ஆனால், இப்பொழுது இங்கு என்ன நடந்திருக்கிறது?

### "இது மாற்றமில்லை; துர்நாற்றம்!"

உங்கள் கொள்கை எதிரி என்று சொன்ன பா.ஜ.க. தலைமையிலான என்.டி.ஏ கூட்டணியில், போட்டியிட்ட ஒரு சட்டமன்ற உறுப்பினரை அந்தக் கட்சித் தலைவருக்கே தெரியாமல், இந்த ஆட்சிக்கு ஆதரவு தர வைத்திருந்தீர்கள். இப்போது நான் சொல்வது மிகவும் டீசன்டான வெர்ஷன்.

அந்தக் கட்சித் தலைவர் டி.டி.வி. தினகரன் சொல்லும்போது, என்ன தெரியுமா சொன்னார்? ஆட்சிக்கு வருவதற்கு முன்பே, குதிரை பேரத்தில் ஈடுபடுகிறார்கள் என்று சொன்னார். நேற்று சொல்லி இருக்கிறார். 'மாற்றம், மாற்றம் என்று சொன்னீர்கள். இது மாற்றமில்லை. துர்நாற்றம்' என்று சொல்லி இருக்கிறார்.

தொடர்ச்சி 3-ஆம் பக்கம்